**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆடித் திங்கள் 16ம் நாள்

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் சனிக்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 122/2018**

**CNR.No.TNMY07-000154-2018**

1. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி டி.மு.இலாக்கா, சீர்காழி தாலுக்கா, சீர்காழி டவுன், செம்மங்குடி-அஞ்சல், 7/NA.திருமுல்லைவாசல் மெயின் ரோட்டில் வசிக்கும் கிருஷ்ணன் மனைவி, 57 வயதுள்ள உமா.

2. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி டி.மு.இலாக்கா, சீர்காழி தாலுக்கா, சீர்காழி டவுன், செம்மங்குடி-அஞ்சல், 7/NA.திருமுல்லைவாசல் மெயின் ரோட்டில் வசிக்கும் வரதன் குமாரர், 65 வயதுள்ள கிருஷ்ணன்.

**...வாதிகள்**

**...எதிர்...**

1. சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல், 1/138 மெயின் ரோட்டில் வசிக்கும் வீரப்ப படையாச்சி குமாரர், 86 வயதுள்ள லெட்சுமணன் (இறந்தார்)

2. சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல், 1/138 மெயின் ரோட்டில் வசிக்கும் லெட்சுமணன் குமாரர், 50 வயதுள்ள கவிமன்னன்.

3. சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல், 1/138 மெயின் ரோட்டில் வசிக்கும் லெட்சுமணன் குமாரர், 42 வயதுள்ள மகேந்திரன் (இறந்தார்)

4. சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி தாலுக்கா, நெப்பத்தூர், தெற்கு தெருவில் வசிக்கும், பொற்செழியன் மனைவி, 53 வயதுள்ள சத்தியவேணி.

5. நன்னிலம் தாலுக்கா, பேரளம் ஆலத்தூர் முகவரியில் வசிக்கும் சிவராமன் மனைவி, 38 வயதுள்ள பாமா.

6. சீர்காழி டி.மு.இலாக்கா, சீர்காழி தாலுக்கா, சீர்காழி தென்பாதி, சார்-பதிவாளர் அலுவலகத்தில் சார்-பதிவாளராக பணிபுரிந்து வரும் சார்-பதிவாளர் அவர்கள்.

**...பிரதிவாதிகள்**

தாவா A ஷெடியூல் சொத்தை 1ம் வாதி குத்தகை உரிமையுடன் அனுபவிப்பதை 1 முதல் 5 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், தாவா B ஷெடியூல் சொத்தை 2ம் வாதி குத்தகை உரிமையுடன் அனுபவிப்பதை 1 முதல் 5 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், தாவா B ஷெடியூல் சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 11.02.2011ம் வருடத்திய ஆவண எண் 418 எண்ணாக பதிவாகியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்பல் பரிகாரம் கோரியும், தாவா B ஷெடியூல் சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 11.02.2011ம் தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி அதை சீர்காழி சார்–பதிவகத்தில் 2011ம் வருடத்திய ஆவண எண் 419 எண்ணாக பதிவாகியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்பல் பரிகாரம் கோரியும், தாவா A ஷெடியூல் சொத்தை 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்ட்டுகளோ வேறு எவருக்கு சாகுபடி பகுதி உரிமை மாற்றம் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், தாவா B ஷெடியூல் சொத்தை 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்ட்டுகளோ, எவருக்கும் எவ்வித விற்கிரயமும் செய்து அதை 6ம் பிரதிவாதி அலுவலகத்தில் எவ்வித வில்லங்க பதிவும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 09.04.2018 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 09.04.2018 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 1995ம் வருடத்திலும், 05.04.2018ம் தேதியிலும் தாவா A ஷெடியூல் சொத்து அமைந்துள்ள சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி டவுனிலும், தாவா B ஷெடியூல் சொத்து அமைந்துள்ள சீர்காழி டி.மு.லாகா, செம்மங்குடி கிராமத்திலும் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |

**<u>பொருமானம் மற்றும் நீதிமன்ற கட்டணம்</u>**

| | | **நீ.ம.க** |
|---|---|---|
| 1. தாவா A ஷெடியூல் சொத்தை 1ம் வாதி அமைதியாக குத்தகை உரிமையுடன் அனுபவிப்பதை 1 முதல் 5 பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அவர்களது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற 1ம் வாதியின் பொறுமானம் நீ.ம.க.ச பிரிவு 27(c)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. | ரூ. 1000/– | ரூ.30/– |
| 2. தாவா B ஷெடியூல் சொத்தை 2ம் வாதி அமைதியாக குத்தகை உரிமையுடன் அனுபவிப்பதை 1 முதல் 5 பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அவர்களது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற 2ம் வாதியின் பொறுமானம் நீ.ம.க.ச பிரிவு 27(c)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. | ரூ. 1000/– | ரூ. 30/– |
| 3. தாவா B ஷெடியூல் சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 11.02.2011ம் தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி அதை சீர்காழி சார்–பதிவகத்தில் 2011ம் வருடத்திய 418 எண்ணாக பதிவாகியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்பல் பரிகாரம் பெற 2ம் வாதியின் பொறுமானம் நீ.ம.க.ச பிரிவு 25(d)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. | ரூ. 5000/– | ரூ.150/– |
| 4. தாவா B ஷெடியூல் சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 11.02.2011ம் தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி அதை சீர்காழி சார்–பதிவகத்தில் 2011ம் வருடத்திய 419 எண்ணாக பதிவாகியுள்ள செட்டில்மெண்ட் | | |

| | | |
|---|---|---|
| ஆவணம் செல்லாது என விளம்பல் பரிகாரம் பெற 2ம் வாதியின் பொறுமானம் நீ.ம.க.ச பிரிவு 25(d)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. | ரூ. 5000/- | ரூ.150/- |
| 5. தாவா A ஷெடியூல் சொத்தை 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அவர்களது ஏஜெண்டுகளோ எவருக்கும் சாகுபடி பகுதி உரிமை மாற்றம் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற 1ம் வாதி பொறுமானம் நீ.ம.க.ச பிரிவு 27(c)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. | ரூ. 1000/- | ரூ. 30/- |
| 6. தாவா B ஷெடியூல் சொத்தை 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அவர்களது ஏஜெண்டுகளோ எவருக்கும் எவ்வித விற்கிரயமும் செய்து அதை 6ம் பிரதிவாதி அலுவலகத்தில் எவ்வித வில்லங்க பதிவும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற 2ம் வாதி பொறுமானம் நீ.ம.க.ச பிரிவு 27(c)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. | ரூ. 1000/- | ரூ. 30/- |
| **கூடுதல்** | **ரூ.14,000/-** | **ரூ.420/-** |

தாவா மதிப்பு ரூ.14,000/- என மதிப்பிடப்பட்டு, நீதிமன்ற கட்டணமாக ரூ.420/- செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 15.07.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையில், 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 05.12.2023 அன்று இந்நீதிமன்றத்தால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.

S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 6ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. P. விஜய் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்பாணை

1. இவ்வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2. தாவா A ஷெடியூல் சொத்தை 1ம் வாதி குத்தகை உரிமையுடன் அனுபவிப்பதை 2, 4, 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அல்லது ஏஜெண்டுகளோ, சட்டப்புறம்பாக எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் 1ம் வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. தாவா B ஷெடியூல் சொத்தை பொறுத்து 2ம் வாதியின் பரிகாரம் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

4. வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரங்கள் மற்றும் மற்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் தள்ளுபடி செய்யப்பட்டும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

5. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை.

## சொத்து விபரம்
## A ஷெடியூல்

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், சீர்காழி சார்–பதிவு சரகம், சீர்காழி தாலுக்கா, சீர்காழி டவுன், திருமுல்லைவாசல் மெயின் ரோட்டில்,

1. நஞ்சை சர்வே எண் 358/1–ல் ஏக். 2.49 செண்ட் பூரா

2. நஞ்சை சர்வே எண் 359/3–ல் ஏக். 0.81 செண்ட் பூரா

----------------

ஆகக் கூடுதல் ஏக். 3.30 செண்ட்

-----------------

நிலமும், அதில் உள்ள கூரை வீடு உட்பட. மேற்படி வீட்டின் நெ.7/NA மின் இணைப்பு எண் 308.

**B ஷெடியூல்**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், சீர்காழி சார்–பதிவு சரகம், சீர்காழி தாலுக்கா, செம்மங்குடி கிராமத்தில்

| | | |
|---|---|---|
| 1. நஞ்சை சர்வே எண் 14/1A3–ல் | ஏக். 1.06 செண்ட் | பூரா |
| 2. நஞ்சை சர்வே எண் 14/1B–ல் | ஏக். 2.88 செண்ட் | பூரா |
| 3. நஞ்சை சர்வே எண் 15/1A–ல் | ஏக். 0.12 செண்ட் | பூரா |

------------------

ஆகக் கூடுதல் ஏக். 4.06 செண்ட்

------------------

4 ஏக்கர், 06 செண்ட் நஞ்சை நிலமும், இதில் உள்ள 7 1/2 HP மோட்டார், அதை சார்ந்த மின் இணைப்பு சாதனங்கள், மோட்டார் ஷெட் உட்பட

**வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/– மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**தீர்ப்பாணை**

அசல் வழக்கு எண்.122/2018
நாள்.01.08.2026.